குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி. எண். 49/ 2018

2020 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் தேதி திங்கள் கிழமை புகார்தாரர் தரப்பு சாட்சியாகிய 1 வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. எம். உமா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. பி. மோகன்ராஜ் | வயது | : 45 |
| த/பெ | : பாலசுப்ரமணியம் | தொழில் | : டைலர் |
| ஊர் | : அம்மன் காம்ப்ளக்ஸ் சிந்தாமணியூர் | சமயம் | : இந்து |
| வட்டம் | : சிந்தாமணியூர் | ஜாதி | : வன்னியர் |
| மாவட்டம் | : சேலம் | | |
| ம.சா | : 1 | தேதி | : 19.10.2020 |

முதல் விசாரணை:

நான் சேலம் மாவட்டம், மேட்டுர் வட்டம், சிந்தாமணியூர் அஞ்சல், சிந்தாமணியூர், அம்மன் காம்ப்ளக்ஸில் வசிக்கும் பாலசுப்ரமணியம் மகன் பி. மோகன்ராஜ் ஆகிய நான் பிரமாணமாய் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் நான் மேற்படி வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது முதல் விசாரணைக்காக பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையென்று உறுதி கூறுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு வழக்கு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| வ . எண் | தேதி | சான்றாவணங்கள் | ஆவண குறியீடு | ஆவணத் தன்மை |
|---|---|---|---|---|
| 1. | 24.03.2017 | எதிரி புகார்தாரருக்கு கொடுத்த தலா ஒரு லட்சம் தொகை கொண்ட மூன்று காசோலைகள் (காசோலை எண்கள். 000221, 000216, 000223) | வா.சா ஆ.1 | அசல் |
| 2. | 24.03.2017 | புகார்தாரர் ஓமலூரிலுள்ள கனரா வங்கியில் காசோலைகளை செலுத்தியதற்கான இரசீது (காசோலை எண்கள். 000221, 000216) | வா.சா.ஆ.2 | அசல் |
| 3. | 29.03.2017 | புகார்தாரர் ஓமலூரிலுள்ள கனரா வங்கியில் காசோலையை செலுத்தியதற்கான இரசீது (காசோலை எண். 000223) | வா.சா.ஆ.3 | அசல் |
| 4. | 28.03.2017 | எதிரியின் காசோலை வங்கி கணக்கு “Payment stoppes by drawer"என்ன | வா.சா.ஆ.4 | அசல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருப்பதாக வங்கி கொடுத்த இன்டிமேசன் மெமோ | | |
| 5. | 03.04.2017 | எதிரியின் காசோலை வங்கி கணக்கு “Payment stoppes by drawer"என்ன இருப்பதாக வங்கி கொடுத்த இன்டிமேசன் மெமோ | வா.சா.ஆ.5 | அசல் |
| 6. | 19.04.2017 | வழக்கறிஞர் அறிவிப்பு | வா.சா.ஆ.6 | அலுவலக நகல் |
| 7. | 22.04.2017 | அஞ்சல் ஒப்புகை அட்டை | வா.சா.ஆ.7 | அசல் |

மேற்கண்ட ஆவணங்களை ஏற்று எதிரியை மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்படி தண்டிக்குமாறும் இழப்பீடு வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

(நிலவி வரும் கொரோனா அச்சுறுத்தல் காலத்தின் காரணமாக எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகாததால் குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/ சுவேதாரண்யன்,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.